


**04.09. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - இத்தாலி நாடுகளுக்கிடையே நல்லுறவை மேலும் வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி பக்தி சிரத்தையுடன் இன்று கொண்டாடப்படுகிறது

3. தமிழ்நாட்டின் நிதிநிலைமை சீரானவுடன் தூய்மை பணியாளர்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ஆனந்த் உறுதியளித்துள்ளார்.

4. கும்பகோணம் நகரில் உள்ள வாய்க்கால்கள் தூர்வாரப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

5. U.S ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, அமெரிக்காவின் இவான் கிங் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

***************

பிரதமர்

இந்தியா இத்தாலி நாடுகளுக்கிடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் நீண்ட நாள் பிரதமராக Giorgia meloni பதவி வகித்து வருவதற்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், இருநாட்டு மக்களின் வளமான எதிர்காலத்திற்காக ஒருங்கிணைந்து செயல்படுவதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக கூறினார்.

பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இத்தாலி பிரதமர் Giorgia meloni-யின் பங்களிப்பை பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் எடுத்துரைத்துள்ளார்.

***************

கிருஷ்ணஜெயந்தி

கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி பக்தி சிரத்தையுடனும், உற்சாகத்துடனும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி, தமிழக ஆளுநர் திரு.ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ கிருஷ்ணரின் உபதேசங்களை பின்பற்றி அனைவரது வாழ்விலும் நேர்மறை ஆற்றல், வலிமை கிடைக்க வாழ்த்தியுள்ளனர்.

மக்கள் தங்கள் இல்லங்களில் கிருஷ்ணர் பாதங்களை வரைந்தும், மலர்களால் அலங்கரித்தும் வெண்ணெய், அவல், பொரிகடலை உள்ளிட்டவைகளை படைத்து வழிபடுகின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு திருக்கோவில்களில் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி ஏராளமான மக்கள் இன்றுகாலை முதல் சுவாமி தரிசனம் செய்தனர்.

விழுப்புரம் மருதூரில் உள்ள அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோவிலில் சிறப்பு தரிசனத்தை தொடர்ந்து உற்சவ மூர்த்தி வீதி உலா நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தர்மபுரியை அடுத்த ஆட்டுக்காரன் பட்டியில் உள்ள ஸ்ரீ ராதே கிருஷ்ணர் கோவிலில் சிறப்பு பூஜைகள் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

சேலம் செவ்வாய்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ மாணவியர் கிருஷ்ணர் ராதை வேடம் அணிந்து நடனமாடி உற்சாகமாக இந்நாளை கொண்டாடினர்.

தென்காசி மாவட்டம் பிரசித்தி பெற்ற பொருந்திநின்ற பெருமாள் திருக்கோவிலில் இன்றிரவு உறியடி திருவிழா நடைபெறுகிறது.

அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் தென்காசியின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான குழந்தைகள் கிருஷ்ணர் வேடமணிந்து வருகை புரிவதால் விழா களைகட்டியுள்ளது.

கிருஷ்ணர் அவதரித்த உத்திர பிரதேச மாநிலம் மதுராவில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயங்கள், வண்ண வண்ண ஒளி அலங்காரங்களுடன் ஒளிர்கின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இவ்விழாவில் பங்கேற்க மக்கள் அங்கு வருகை புரிந்துள்ளனர்.

***************

<u>ராக்கெட்</u>

GSLV F-17 ராக்கெட் மூலம் EOS – 05 புவி கண்காணிப்பு செயற்கைகோள், ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து இன்று அதிகாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

36 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் புவி நிலை சுற்றுவட்ட பாதையில் இந்த செயற்கைகோள் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இந்திய விண்வெளி துறையின் சாதனைக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி,

மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத்சிங், டாக்டர் ஜிதேந்திரசிங், டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

நாட்டின் முதல் புவிசார் இமேஜிங் செயற்கைகோளின் வெற்றி இந்திய விண்வெளி துறையின் புதுமையையும், தொழில்துறையின் வளர்ந்து வரும் பலத்தையும் பறைசாற்றுகிறது என பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நம் நாடு மற்றும் அண்டை பகுதிகளை இந்த செயற்கைகோள் கண்காணித்து நிகழ் படங்களை அனுப்பும் வகையில் வடிகமைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் தெரிவித்துள்ளார்.

***************

<u>பிரிக்ஸ்</u>

பிரிக்ஸ் நாடுகளின் தலைமை நீதிபதிகள் மாநாடு புதுதில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்திய உச்சநீதிமன்றம் சார்பில் நடைபெறும் இந்த 3 நாள் மாநாட்டில் நீதி வழங்கும் நடைமுறைகள், சர்வதேச பிரச்சனைகளுக்கு தீர்வு, தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சி உள்ளிட்ட விஷயங்களில் விவாதங்கள் இடம்பெறும்.

முதல் நாளான இன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த், ரஷ்யா, சீனா, எகிப்து இந்தோனேசியா உள்ளிட்ட நாட்டு நீதித்துறை தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உள்ளார்.

***************

நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தில் உருக்குலைந்த திரிசூலி நீர்மின் நிலைய சுரங்கத்திற்குள் சிக்கியவர்களை மீட்கும் பணிகளின் முதற்கட்டமாக இரண்டு பேர் 10 நாட்களுக்கு பின்னர் இன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சுரங்கத்திற்குள் சிக்கியிருக்கும் மேலும் 150 பேரை மீட்கும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது.

இந்திய சுரங்க மீட்பு தொழில்நுட்ப நிபுணர் குழுவினர் நேபாள ராணுவத்துடன் இணைந்து மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

***************

முதலமைச்சர்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கொன்னையாறு கிராமத்தில் நேற்று நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த நான்கு மாணவிகளின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

***************

தூய்மை பணியாளர்கள்

தமிழ்நாட்டின் நிதிநிலைமை சீரானவுடன் தூய்மை பணியாளர்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்று மாநில ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் உறுதியளித்துள்ளார்.

ஊதிய உயர்வு, பணிநிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் கடந்த இரண்டு வார காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மை பணியாளர்களை இன்று சந்தித்து பேசிய

அமைச்சர், கடந்த கால ஆட்சியில் கஜானா காலி செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போதைய அரசுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுவதாக கூறினார்.

விரைவில் கோரிக்கைகள் குறித்து உரிய பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார்.

மாநில அமைச்சர்கள் திரு.ஆதவ் அர்ஜுனா, திரு.நிர்மல் குமார், திரு.ராஜ்மோகன் ஆகியோர் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையின் போது உடனிருந்தனர்.

***************

<u>வினோத்</u>

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரில் உள்ள வாய்க்கால்கள் தூர்வாரப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணம் காவிரி ஆற்றில் மண்டியுள்ள புல் புதர்கள் அகற்றும் பணிகளை இன்று துவக்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாய்க்கால்களில் கழிவு நீர் கலப்பதை தடுக்கும் பணிகள் விரைவில் துவங்கும் என்றார்.

3 கிலோ மீட்டர் தொலைவிற்கு இந்த பணிகள் நடைபெறுவதாக கூறினார்.

***************

<u>முக்கொம்பு</u>

மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் திறக்கப்பட்ட நீர் முக்கொம்பு மேலணைக்கு இன்று வந்தடைந்தது.

இந்த தண்ணீர் ஓரிரு நாட்களில் கல்லணை சென்றடையும் என்றும் நாளை மறுநாள் பாசனத்திற்காக கல்லணையிலிருந்து நீர் திறக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று 92.16 அடியாக உயர்ந்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 7 ஆயிரத்து 790 கனஅடியாக உள்ள நிலையில் காவிரி டெல்டா பாசனத்திற்காக 7 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

***************

<u>கள்ளக்குறிச்சி</u>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு மழை பொழிவு குறைந்துள்ளதால் மாற்றுப்பயிரை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என்று ஆட்சித்தலைவர் திருமதி பத்மஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

குறைந்த நீரை பயன்படுத்தி சிறுதானியங்கள் உள்ளிட்டவற்றை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

<u>இருவரி</u>

பெரம்பலூர் காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் முதியோர் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டை தாரர்களுக்கு இல்லம் தேடி ரேசன் பொருட்கள் விநியோகிக்கும் பணி நாளைமுதல் 7ஆம் தேதிவரை நடைபெறும்.

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் தெத்துகாடு கிராமத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.மதுபாலன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பு குறைதீர் நாள் கூட்டம் வரும் செவ்வாய்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.மோகனசந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் விவசாய கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி விவசாயிகள் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தலைகவசம் அணிந்து வந்த இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி காவல்துறையினர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

***************

## கலை பண்பாட்டு துறை

தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை சார்பில் தஞ்சை மண்டலத்திற்குட்பட்ட ஓவியர்களின் சிறந்த படைப்புகள் நாளை முதல் இரண்டு நாட்கள் காட்சிபடுத்தப்படுகிறது.

தஞ்சை ராஜ ராஜ சோழன் மணிமண்டபத்தில் நடைபெற உள்ள இக்கண்காட்சியை பொதுமக்கள் இலவசமாக பார்வையிடலாம் என கலை பண்பாண்டு மையத்தின் உதவி இயக்குனர் திரு.ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

***************

## டென்னிஸ்

U.S ஒப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி அமெரிக்காவின் இவான் கிங் இணை - நெதர்லாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா, ஈக்வடாரின் எஸ்கோபார் இணை – ஆஸ்திரிய செக் குடியரசு இணையுடன் இன்று மோதவுள்ளது.

***************

<u>பேட்மிண்டன்</u>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி இணை – டென்மார்க் இணையை எதிர்கொள்கிறது.

***************

<u>ஸ்குவாஷ்</u>

லண்டனில் நடைபெற்று வரும் ஸ்குவாஷ் கிளாசிக் போட்டியின் காலிறுதிக்கு இந்தியாவின் அனாஹத் சிங் முன்னேறியுள்ளார்.

***************

<u>கிரிக்கெட்</u>

ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் நாளை பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறும் இந்த போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா ஏற்கனவே தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

***************